


**24.02.2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. நாட்டின் வளர்ச்சியில் ஜவுளி, சுற்றுலா, தொழில்நுட்பம் ஆகிய மூன்றும் தேச வளர்ச்சியில் முக்கிய பங்காற்றுவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. வேளாண் நிதியுதவி திட்டத்தின் கீழ் 19-வது தவணை தொகை 22 ஆயிரம் கோடி ரூபாய் நிதியை 9 கோடியே 8 லட்சம் விவசாயிகளின் வங்கி கணக்கில் இன்று பிரதமர் விடுவிக்கிறார்.

3. தமிழகத்தில் மலிவு விலை மருந்து விற்பனைக்கு வகை செய்யும் ஆயிரம் மருந்தகங்களை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று திறந்துவைத்துள்ளார்.

4. முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் 77ஆவது பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

5. இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்க கோரி ராமேஸ்வர மீனவர்கள் இன்றுமுதல் வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

<u>இனி விரிவான செய்திகள்</u>

<u>பிரதமர் உச்சிமாநாடு</u>

ஜவுளி, சுற்றுலா, தொழில்நுட்பம் ஆகிய மூன்றும் தேச வளர்ச்சியில் முக்கிய பங்காற்றுவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

மத்திய பிரதேச தலைநகர் போபாலில் உலக முதலீட்டாளர்கள் உச்சி மாநாட்டை இன்று துவக்கிவைத்து பேசிய அவர் இம்மூன்று துறைகளிலும் கலாச்சார திறன்களை மேம்படுத்துவதோடு, வேளாண் ஜவுளி மற்றும் புவி மருத்துவ ஜவுளி பிரிவுகளையும் முன்னெடுத்து செல்வதில் அரசு முனைப்புடன் செயலாற்றுவதாக குறிப்பிட்டார்.

இந்திய வரலாற்றில் முதல் முறையாக உலக நாடுகள் நம் நாட்டை நம்பிக்கையுடன் கண்ணோக்குவதாக பிரதமர் பெருமிதம் தெரிவித்தார்.

சாமானிய மக்கள், பொருளாதார நிபுணர்கள், உயர் நிறுவனங்கள், பிற நாடுகள் நம் நாட்டை எதிர்பார்ப்புடன் நோக்குவதாக அவர் குறிப்பிட்டார்.

உலக வங்கி தொடங்கி, அனைத்து முக்கிய நிறுவனங்களும், வேகமாக வளர்ந்து வரும் பொருளாதார நாடாக இந்தியாவை, ஏற்றுக்கொண்டிருப்பதாக குறிப்பிட்டார்.

இந்த நம்பிக்கை நம் நாட்டில் உள்ள பல்வேறு மாநிலங்களின் நம்பிக்கையையும் அதிகரித்திருப்பதாக பிரதமர் குறிப்பிட்டார்.

கனிம வளத்திலும், கட்டமைப்பு பிரிவிலும் முன்னோடி மாநிலமாக திகழும் மத்திய பிரதேசத்தில் முதலீடுகளுக்கு பிரதமர் அழைப்பு விடுத்தார்.

*********

<u>பிரதமர் - கிசான் சம்மான்</u>

இதனிடையே பிரதமரின் கிசான் சம்மான், வேளாண் நிதியுதவி திட்டத்தின் 19-வது தவணை தொகையான 22 ஆயிரம் கோடி ரூபாய் நிதியை, நாடுமுழுவதிலுமுள்ள 9 கோடியே 8 லட்சம் விவசாயிகளின் வங்கி கணக்கில் இன்று பிற்பகல் பீஹார் மாநிலம் பகல்பூரிலிருந்து விடுவிக்க உள்ளார்.

இந்த திட்டத்தின் 6ஆவது ஆண்டை ஒட்டி விவசாயிகளுக்கு வாழ்த்து தெரிவித்த பிரதமர் இதுவரை மூன்றரை லட்சம் கோடி ரூபாய் இந்த திட்டத்தின் கீழ் விவசாயிகளின் வங்கி கணக்கில் செலுத்தப்பட்டுள்ளதாக மகிழ்ச்சி தெரிவித்தார்.

இதன்மூலம் விவசாயிகளின் வாழ்வாதாரம் வளத்துடன் வலுப்பெற்றிருப்பதாக பிரதமர் தமது சமூக வலைதள பதிவில் பெருமிதம் வெளியிட்டுள்ளார்.

*********

<u>வருமான வரி</u>

வருமான வரி 2025-ஐ மக்களவையின் தேர்வு குழுவினர் புதுதில்லியில் இன்று ஆய்வு செய்து வருகின்றனர்.

பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.பைஜெயந்த் பாண்டா தலைமையிலான இக்குழுவில் 31 பேர் இடம்பெற்றுள்ளனர்.

இக்குழு தனது அறிக்கையை வரும் நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரின் முதல் நாளில் சமர்ப்பிக்க உள்ளது.

வருமானவரி சார்ந்த சட்டதிருத்தங்களுக்கு வகை செய்யும் இம்மசோதா நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் முதல்கட்ட அமர்வில் இம்மாதம் தாக்கல் செய்யப்பட்டது.

பின்னர் வரைவு சட்டம் மக்களவையின் தேர்வு குழுவிற்கு பரிந்துரைக்கப்பட்டது

*********

மாண்டவியா - கரந்த் லஜே

மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா, சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தலைமை இயக்குனர் திரு.கில்பர்ட் ஹூங் போவுடன் தொழிலாளர் நலம், பாதுகாப்பு திட்டங்கள் குறித்து புதுதில்லியில் இன்று பேச்சுவார்த்தை மேற்கொண்டார்.

வளர்ச்சி அடைந்த பாரதம் மற்றும் ஜி-20 முன்னுரிமைகள் வரிசையில் இந்தியாவின் பணித்திறன் மேம்பாடு குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

அனைவரையும் உள்ளடக்கிய நிலையான எதிர்காலத்தை உருவாக்குவதில் சர்வதேச தொழிலாளர் அமைப்புடன் முனைப்புடன் பணியாற்றுவதை எதிர்நோக்கி இருப்பதாக அமைச்சர் தமது சமூக வலைதள பதிவில் கூறியுள்ளார்.

*********

அமித்ஷா

கோவை வெள்ளியங்கிரி மலையடிவாரத்தில் ஈஷா யோகா மையம் சார்பில் நடைபெறும் மகா சிவராத்திரி விழாவில் பங்கேற்பதற்காக மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா, நாளை மாலை கோவை வருகிறார்.

இப்பயணத்தின் ஒருபகுதியாக கோவையில் பிஜேபி அலுவலக கட்டிடத்தை திரு.அமித்ஷா திறந்துவைப்பதுடன் கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை மேற்கொள்கிறார்.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகனும் இந்நிகழ்வுகளில் பங்கேற்கிறார்.

*********

முதலமைச்சர்

தமிழகத்தில் மருத்துவம் மற்றும் கல்விக்கு உயர் முன்னுரிமை வழங்கப்படுவதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் ஆயிரம் முதல்வர் மருந்தகங்களை சென்னை அண்ணா நூற்றாண்டு நூலக கலையரங்கத்தில் இன்று திறந்து வைத்து பேசிய முதலமைச்சர் இம்மருந்தகங்களில் தரமான மருந்துகள் மலிவான விலையில் விற்கப்படும் என்றார்.

மருந்தகங்கள் திறக்கப்பட்டதை அடுத்து **B.pharm/D.pharm** மருந்தியியல் பட்டதாரிகள் ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

வாய்ஸ்

இம்மருந்தகங்களில் 762 மருந்து வகைகள், அறுவை சிகிச்சைக்கான உபகரணங்கள், சித்த மருந்துகள் உள்ளிட்டவை விற்பனை செய்யப்படுகின்றன.

மாநிலத்தின் இதர பகுதிகளில் முதல்வர் மருந்தகங்களின் விற்பனையை அமைச்சர்கள் துவக்கிவைத்தனர்.

*********

## அமைச்சரவை கூட்டம்

தமிழக அமைச்சரவை கூட்டம் முதலமைச்சர் தலைமையில் நாளை நடைபெறுகிறது.

அடுத்த மாதம் 14ஆம் தேதி தமிழக பட்ஜெட் தாக்கல் செய்யப்பட உள்ள நிலையில் அதில் அறிவிக்கப்பட வேண்டிய முக்கிய அறிவிப்புகள் குறித்து இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்படுகிறது.

*********

## மாநில அமைச்சர்கள் குழு

தமிழகத்தில் அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர் சங்கங்களின் கோரிக்கைகள் தொடர்பான அமைச்சர் குழு பேச்சுவார்த்தை சென்னை தலைமை செயலகத்தில் இன்று நடைபெற்றது.

மாநில அமைச்சர்கள் திரு.எ.வ.வேலு, திரு.தங்கம் தென்னரசு, திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி திருமதி கயல்விழி செல்வராஜ் ஆகியோர் அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர் சங்கங்களுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டனர்.

*********

## ஜெயலலிதா பிறந்த தினம்

மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் 77ஆவது பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

சென்னை ராயப்பேட்டையில் அஇஅதிமுக தலைமை அலுவலகத்தில் அன்னாரது திருவுருவ சிலைக்கு உள்ள கட்சியின் பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

காமராஜர் சாலையில் அமைக்கப்பட்டுள்ள ஜெயலலிதாவின் திருவுருவ படத்திற்கு தமிழக அரசின் சார்பில் மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

*********

## போராட்டம்

இலங்கை கடற்படையினரால் நேற்று கைது செய்யப்பட்ட 32 மீனவர்களையும் அவர்களது மீன்பிடி படகுகளையும் விடுவிக்க கோரி ராமேஸ்வர மீனவர்கள் இன்றுமுதல் காலவரையற்ற வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சிறையில் உள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடி படகுகளையும் விடுவிக்க மத்திய மாநில அரசுகள் உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

இதன்காரணமாக ராமேஸ்வரம் துறைமுகத்தில் உள்ள 700க்கும் மேற்பட்ட விசை படகுகள் இன்று கடலுக்குள் மீன்பிடிக்க செல்லவில்லை.

*********

அமைச்சர்கள்

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் கைகளை இழந்தவர்களுக்கான செயற்கை கை வழங்கும் முகாமை மாநில தொழில்துறை அமைச்சர் திரு.டி.ஆர்.பி.ராஜா இன்று துவக்கிவைத்தார்.

கரூரில் ஊரக வளர்ச்சி துறை மற்றும் வேளாண் துறை சார்பில் ஒருகோடியே 31 லட்ச ரூபாய் மதிப்பிலான நல திட்ட உதவிகளை மாநில மின்துறை அமைச்சர் திரு.செந்தில்பாலாஜி இன்று வழங்கினார்.

*********

இருவரி

ராணிப்பேட்டை மாவட்டத்தில் குழந்தைகளை பாலியல் வன்கொடுமைகளிலிருந்து பாதுகாக்கும் சட்டம் குறித்த விழிப்புணர்வு கூட்டம் மாவட்ட ஆட்சியர் சந்திரகலா தலைமையில் நடைபெற்றது.

அரசு நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் இதில் பங்கேற்றனர்.

திண்டுக்கல் காந்தி கிராம கிராமிய நிகர்நிலை பல்கலைகழகத்தில் தேசிய அறிவியல் தின கொண்டாட்டங்களுக்கான விழா இன்று தொடங்கியது.

5 நாட்கள் நடைபெறும் இவ்விழாவை துவக்கிவைத்த பல்கலைகழக துணைவேந்தர் முனைவர் ஜெகன்நாதன் மாணாக்கர் தங்களது செறிவு திறனை மேம்படுத்தி அறிவியலில் சிறந்து விளங்க அறிவுறுத்தினார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கல்குவாரி குத்தகை உரிமம் நாளைமுதல் இணையதளம் வாயிலாக நடைமுறை படுத்தப்படுவதால் அனுமதியின்றி இப்பணிகளை மேற்கொள்வோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என ஆட்சித்தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன் எச்சரித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணை நல்லூர் வட்டாச்சியர் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகள் உபகரணங்கள் பெறுவதற்கான முன்பதிவு சிறப்பு முகாம் நாளை மறுநாள் நடைபெறுகிறது.

*********

உதகை – வாய்ஸ்

உதகை மற்றும் அதனை சுற்றி உள்ள பகுதிகளில் பிளம்ஸ், **Peach** எனப்படும் குழிப்பேரி பழங்கள் விற்பனை களை கட்டியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

--- வாய்ஸ் -----

*********

புலிகள் காப்பகம்

நெல்லை மாவட்டம் களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகத்தில் புலிகள் கணக்கெடுக்கும் பணி இன்று தொடங்கியது.

150க்கும் மேற்பட்ட வன ஊழியர்கள் 34 குழுக்களாக இப்பணியில் ஈடுபட்டுள்ளதாக புலிகள் காப்பக துணை இயக்குனர் திரு.இளையராஜா தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

*********

<u>கோவில்</u>

மகாசிவராத்திரியை முன்னிட்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் உலக பிரசித்திபெற்ற சிவாலய ஓட்டம் நாளை அம்மாவட்டத்தின் திருமலையிலிருந்து தொடங்க உள்ளது.

திருவாரூர் ஸ்ரீதியாகராஜர்சுவாமி திருக்கோவிலில் சிவராத்திரியை முன்னிட்டு நேற்று தொடங்கிய பல்வேறு மாநிலங்களின் நாட்டிய நிகழ்ச்சி வரும் வியாழக்கிழமை வரை நடைபெறுகிறது.

*********

<u>கிரிக்கெட்</u>

**Rawalpindi**-யில் ஐ.சி.சி. சாம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டியில் பங்களாதேஷ் இன்று நியூசிலாந்தை எதிர்கொள்கிறது.

முன்னதாகநேற்று நடைபெற்ற போட்டியில் இந்தியா வெற்றிபெற்று அரையிறுதிக்கான வாய்ப்பை உறுதி செய்துள்ளது..

மகளிர் பிரீமியர் லீக் 20-20 கிரிக்கெட் போட்டியில் பெங்களூருவில் இன்றிரவு ஏழரை மணிக்கு நடைபெறும் 9ஆவது லீக் ஆட்டத்தில் ராயல் சேலஞ்ர்ஸ் பெங்களூரு– **U.P.** வாரியர்ஸை எதிர்கொள்கிறது.

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது